# 9 திருத்தூதர்களின் அழைப்பு



படம் 9.1 - இயேசுவைப் பின்பற்றிச் சென்ற முதல் திருத்தூதர்கள்
(மத் 4:18-22)

(இயேசு ஒரு நாள் கலிலேயக் கடலோரம் நடந்து கொண்டிருக்கின்றார்.)

அந்திரேயா :- பேதுரு, இந்தப் பக்கம் நடந்து கொண்டு வருகிறவர் யார்?

பேதுரு :- அவர்... இயேசு அல்லவா? (இயேசு அவர்கள் இருந்த இடத்திற்கு வருகிறார்.)

இயேசு :- என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர்கள் ஆக்குவேன்.

பேதுரு,
அந்திரேயா :- ஆண்டவரே நாங்கள் உம்மோடு வருகின்றோம்.

(இயேசு அவர்களோடு நடந்து செல்லும்போது செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரனான யோவானும் தமது தந்தையான செபதேயுவுடன் படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டி ருந்தார்கள்.)

இயேசு :- என் பின்னே வாருங்கள்

யாக்கோபு,
யோவான் :-ஆண்டவரே, நாங்கள் உம்முடன் வருகிறோம். அப்பா, நாங்கள் இயேசுவோடு போகிறோம். பேதுருவும் அந்திரேயாவும் எமது நண்பர்கள். அவர்களும் இயேசுவுடன் இருக்கின்றார்கள்.



இலவச விநியோகத்திற்காக

## இயேசுவைப் பின்சென்ற முதலாவது திருத்தூதர்கள்

இயேசு ''என் பின்னே வாருங்கள்'' எனப் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரை அழைத்தபோது அவர்கள் அவரது அழைப்பை ஏற்று அவரின் பின் சென்றதை மேல்கண்ட உரையாடல் காட்டுகின்றது. (மத். 4 : 18 - 22) அவர்கள் இயேசுவின் முதல் திருத்தூதர்கள்.
அவர்கள்,

- ★ இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.
- ★ அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவின் பின் சென்றார்கள்.
- ★ இயேசுவுக்குத் தம் வாழ்வில் முதலிடம் அளித்தார்கள்.
- ★ இயேசுவின் பின் சென்று நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்.

திருமுழுக்கின் மூலம் எம் அனைவருக்கும் ''என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்.'' என்ற அழைப்பு தரப்பட்டுள்ளது. பலவித பணிகளுக்காக இயேசு எம்மை அழைக்கிறார். அந்த அழைப்புகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

கிறிஸ்தவ அழைப்பிற்குப் பதிலளிப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை :-

- ★ முதல் சீடர்களின் கீழ்ப்படிதலை எம் வாழ்வில் முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ வேண்டும்.
- ★ நாம் பெறும் அழைப்புகளுக்கு வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பதிலளிக்க வேண்டும்.
- ★ இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எமக்குத் தரப்படும் பொறுப்புக்கள், கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
- ★ இறைவார்த்தையை வாசித்துத் தியானிக்க வேண்டும்.
- ★ இறைவார்த்தைக்குச் செவிசாய்த்து மற்றவர்களுக்கு அதனை விளக்க வேண்டும்.

## மத்தேயுவின் அழைப்பு

இயேசு அங்கிருந்து சென்றபோது மத்தேயு என்பவர் சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார். அவரிடம் ''என்னைப் பின்பற்றி வா'' என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.

(மத்தேயு . 9 : 9)

இயேசுவின் காலத்திலே வரி தண்டுவோர், உரோமைப் பேரரசிற்கு அளிக்க வேண்டிய வரியைத் தமது யூத மக்களிடம் அவர்கள் செலுத்த வேண்டிய தொகைக்கும் அதிகமாக அறவிட்டதால் சமூகத்தார் அவர்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்களைப் பாவிகள் என்று எண்ணியிருந்தார்கள். ஆயினும் இயேசு சுங்கச்சாவடியிலிருந்த மத்தேயுவை ''என்னைப் பின்பற்றி வா'' என்று அழைத்தபோது அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்சென்றார். இவ்வாறு பலவித தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தோர், பல்வேறு பின்னணிகளில் இருந்தோர் மற்றும் பலதரப்பட்டோர் அவரது சீடர்களாயினர். நாம் எந்நிலையிலிருந்தாலும் ஆண்டவரின் அழைப்பைப் பெறும்போது அவையனைத்தையும் பின் தள்ளிவிட்டு அவரைப் பின்பற்ற வேண்டியது எமது கடமையாகும்.

## பன்னிரு திருத்தூதர்



படம் 9.2 இயேசுவும் பன்னிரு திருத்தூதர்களும்



இலவச விநியோகத்திற்காக

திருத்தூதர் பன்னிருவரின் பெயர்கள் பின்வருமாறு :

முதலாவது பேதுரு என்னும் சீமோன், அடுத்து அவருடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபு, அவருடைய சகோதரர் யோவான், பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, வரிதண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு, தீவிரவாதியாயிருந்த சீமோன், இயேசு வைக் காட்டிக்கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து.

(மத் - 10 : 2 - 4)

இயேசு பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ''சீடர்கள்'' அல்லது ''திருத்தூதர்கள்'' என பெயரிட்டார். தன்னுடன் இருக்கவும் நற்செய்தியைப் போதிக்க அனுப்பவும் அவர் திருத்தூதரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் :

1. தூய பேதுரு
2. தூய அந்திரேயா
3. தூய பெரிய யாக்கோபு (சந்தியாகு)
4. தூய யோவான்
5. தூய பிலிப்பு
6. தூய பர்த்தலமேயு
7. தூய தோமா
8. தூய மத்தேயு
9. தூய சின்ன யாக்கோபு
10. தூய ததேயு
11. தூய தீவிரவாதி சீமோன்
12. இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து

இயேசுவை யூதரிடம் காட்டிக் கொடுத்த யூதாசு, இறந்தபின் இயேசுவின் திருத் தூதர்களுள் ஒருவர் குறைந்ததால் மத்தியா என்பவரைத் திருச்ச பையில் திருத்தூதராகத் தேர்ந்தெடுத்தனர். இதனால் ஆரம்பத் திருச்ச பையில் பன்னி ரண்டாவது திருத்தூதராகத் தூய மத்தியா விளங்குகின்றார். (திப 1:12-26)

## மறை தூதுப் பணியைப் பொறுப்பளித்தல்

இயேசு விண்ணேற்றமடைய முன் கீழ்க் கண்ட, வார்த்தைகளைக் கூறித் திருத்தூதருக்கு மறை தூதுப் பணியைப் பொறுப்பளித்தார்.

> எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்.
>
> மத் - 28 : 19 - 20

இயேசு இவ்வுலகிலிருந்து விடைபெறும் முன் தம் சீடர்களுக்கு மறைத் தூதுப் பணியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை அளித்தார். ''எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்'' என்ற அழைப்புக்கேற்ப திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனைவரும் கிறிஸ்துவைப் பிறர் அறியும் வண்ணம் செயலாற்ற வேண்டும். கிறிஸ்து தாமே ''தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்'' என்று பணித்தார். திருமுழுக்கு அளித்தலானது கிறிஸ்துவிடமிருந்து திருச்சபை பெற்றுக் கொண்ட ஒரு பொறுப்பாகும். '' நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்'' என்ற கட்டளையினால் நாம் திருமுழுக்குப் பெற்றிருப்பது மட்டும் போதாது. அவர் கற்பித்த மறையைத் தினமும் நாம் வாழவும் பாதுகாக்கவும் வேண்டும். அதனைப் பிறர்க்கும் வெளிப்படுத்த வேண்டும்.

**கிறிஸ்துவை உலகில் அறிமுகம் செய்வதற்குச் செய்ய வேண்டியவை**

- ⋆ திருவிவிலியத்தை நன்கு கற்றல்.
- ⋆ அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ⋆ திருவழிபாடுகளில் தவறாது பங்கு கொள்ளுதல்.
- ⋆ இறைவார்த்தையை வாசித்தல், தியானித்தல், அதன்படி வாழுதல்.
- ⋆ மறைபரப்புப் பணியில் ஈடுபடுதல்.
- ⋆ பங்கின் பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுதல்.



இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

1. இயேசுவின் முதல் சீடர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.
2. இயேசு முதல் சீடருக்கு அளித்த அழைப்பிற்கேற்ப பாட சாலையில் நீர் பணியாற்றும் மூன்று முறைகளை எழுதுக.
3. திப 1:12 - 26 ஐ வாசித்து யூதாசுக்குப் பதிலாக மத்தியா நியமிக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றிய ஆக்கம் ஒன்றை எழுதுக.
4. கிறிஸ்து இவ்வுலகிலிருந்து விடைபெறுமுன் தம் சீடருக் களித்த கட்டளைகள் மூன்று எழுதுக.
5. மற்றவர்களை இறைவன்பால் திருப்புவதற்கு நீர் செயற்படும் மூன்று முறைகளை எழுதுக.
6. கீழே காணப்படும் கட்டங்களில் இயேசுவின் திருத்தூதர் களது பெயர்கள் மறைந்துள்ளன. இந்தக் கட்டங்களை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து திருத்தூதர் பன்னிருவரின் பெயர்களுக்கும் வர்ணம் தீட்டுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | பே | து | ரு | சீ | மோ | ன் | க | ம | தீ |
| ப | த | ம | ர | யா | க் | கோ | பு | சி | வி |
| யோ | கை | அ | ந் | தி | ரே | யா | ப | ந | ர |
| வா | மு | ழ | ல | ச | ய | வ | ர் | தி | வா |
| ன் | சீ | பி | ரு | ம | மா | யா | த் | ட் | தி |
| தி | ரை | லி | ள | த் | இ | க் | த | ரோ | சீ |
| தோ | வை | ப் | மை | தே | ஸ் | கோ | ல | மா | மோ |
| மா | கா | பு | தா | யு | ரே | பு | மே | ரி | ன் |
| சு | யே | தா | த | தே | யு | ஜ | யு | பு | ன |
| யூ | தா | சு | இ | ஸ் | கா | ரி | யோ | த் | து |

7. இறைபணிக்கான அழைப்பை நீர் பெற்றிருந்தால் எவ்வாறு செயற்படுவீர் என்பதை ஐந்து வரிகளில் எழுதிக் காட்டுக.
8. ‘‘இறைவார்த்தைக்குச் செவிசாய்த்தலின் முக்கியத்துவம்’’ என்ற தலைப்பின் கீழ் மறைப்பாடசாலையில் ஆற்றப் போகும் உரையை 100 சொற்களில் எழுதிக் காட்டுக.



**வாழ்க்கைக்கு...**

- CøÓÁõºzøu¯õÚx ÁõÌÂß •Êø©US Cmka ö\À¾® bõÚzvß FØÓõP C¸¨£uõÀ vÚ•® CøÓÁõºzøuø¯ Áõ]zxz v¯õÛ¨÷£õ®.
- CøÓÁõºzøuø¯ ©ØÓÁºPÐ®ö£ØÖU öPõÒÁuØS BÁÚ ö\´÷Áõ®.
- C÷¯_øÁ ©ØÓÁºPÐUS AÔÂ¨÷£õ®.